# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 93/மா/2023**
**நாள் : 13.05.2023**

திரு. G.M. சங்கர்,
மடிப்பாக்கம், சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–14, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் என்பவரின் 08.02.2023 நாளிட்ட மனு 09.02.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 93/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் தனது முறையீட்டு மனுவில்,

"சுமார் 80,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகையினை கொண்டது மடிப்பாக்கம் 187 மற்றும் 188 வார்டுகள் மடிப்பாக்கம் முதல்நிலை ஊராட்சியாக இருந்த காலங்களில் 10.07.1999ம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் நூலக கட்டிடம் மடிப்பாக்கம் பேருந்து நிலையத்தின் அருகே கட்டப்பட்டது. ஆனால் இன்றுவரை அதில் நூலகமே இயங்கவில்லை. கடந்த 2011ம் ஆண்டு முதல் மடிப்பாக்கம் 187 மற்றும் 188வது வார்டுகளாக பிரிக்கப்பட்டும் கடந்த 11 ஆண்டுகளாக நூலக வசதியே ஏற்படுத்தாமல் மக்களின் நூலக வரிப்பணத்தினை மட்டும் வசூலித்துவிட்டு அந்த வசதியினை ஏற்படுத்தாமல் புறந்தள்ளியுள்ளார்கள். இதுகுறித்து ஆணையாளர், சென்னை பெருமாநகராட்சி, மண்டல அலுவலர், மண்டலம் - 14, சென்னை பெருநகர மாநகராட்சி, இயக்குநர், நூலகத்துறை இயக்குனரகம் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவு ஆகியோருக்கு தொடர்ந்து மனு அனுப்பியுள்ளேன். இதுநாள்வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல்

கோரிக்கை நிராகரிக்கப்பட்டது அதன்பிறகு மீண்டும் அந்த கோரிக்கையினை குறைகேட்கும் நாளான 04.11.2019 அன்று தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் கவனத்திற்கும் மனு அளிக்கப்பட்டது. ஆனால் எவ்வித நடவடிக்கைகளும் இந்நாள்வரை எடுக்கப்படவில்லை.

ஆகையால் தாங்கள் தயவுகூர்ந்து சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் -14,பகுதி-42, மடிப்பாக்கம் 187,188 வார்டுகள் பகுதிக்கு ஒருங்கிணைந்த கிளை நூலகம் அமைக்க எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காத மண்டல அலுவலர், மண்டலம்-14, சென்னை மாநகராட்சி அவர்களின் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சட்டத்தின்படி நடவடிக்கைகள் எடுக்க பரிந்துரைக்குமாறு தங்களை மடிப்பாக்கம் பகுதிவாழ் மக்கள் சார்பாக பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. அவர் தனது 17.04.2023 நாளிட்ட அறிக்கையில்:-**

மேற்கண்ட பொருள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிப்பது யாதெனில் நூலகங்கள் மாவட்ட நூலக ஆணைக்குழு மூலமாக நிர்வாகிக்கப்பட்டு வருகிறது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14, பகுதி – 42, கோட்டம் 187 மற்றும் கோட்டம் 188ல் மாவட்ட நூலக ஆணையக் குழுவுக்கு (District Library Authority) சொந்தமாக நூலகக் கட்டடங்கள் தற்போது ஏதும் இல்லை என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள மடிப்பாக்கம் பேருந்து நிலையத்தின் அருகே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளதாக கூறப்படும் கட்டிடத்தில் மடிப்பாக்கம் ஊராட்சி பெருநகர சென்னை மாநகராட்சியில் இணைப்பதற்கு முன்பாகவே (2011) மேற்கண்ட கட்டிடத்தில் பொது விநியோக கடை இயங்கி வருகிறது என்றும் மடிப்பாக்கம் சுற்றியுள்ள கீழ்கண்ட பகுதியில் நூலகங்கள் இயங்கி வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

1. அருள்ஜோதி தெரு, புழுதிவாக்கம்
2. சீலநகர் பிரதான சாலை, புழுதிவாக்கம்
3. பரசுராமன் தெரு, பள்ளிகரணை
4. கிழக்கு கடற்கரை சாலை, பாலவாக்கம்
5. பவுண்ட் சாலை, பெருங்குடி
6. அண்ணா நெடுஞ்சாலை, பெருங்குடி
7. கங்கையம்மன் கோயில் தெரு, காரப்பாக்கம் (மற்றும்)
8. ஆசிரியர் காலனி 2வது குறுக்கு தெரு, நங்கநல்லூர்.

மேலும் மடிப்பாக்கம் கோட்டம் - 187 மற்றும் கோட்டம் - 188ல் ஒருங்கிணைந்த கிளை நூலகம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட

நூலக ஆணையத்திற்கு (District Library Authority) 17.04.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், மாவட்ட நூலக ஆணையக்குழு அலுவலகத்திலிருந்து அறிக்கை பெறப்பட்டவுடன் அதன் அறிக்கையினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 03.05.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 03.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"சென்னை மடிப்பாக்கம் 187 மற்றும் 188வது வார்டுகளில் மடிப்பாக்கம் முதல்நிலை ஊராட்சியாக இருந்த காலத்தில் 1999ம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் நூலக கட்டடம் மடிப்பாக்கம் பேருந்து நிலையத்தின் அருகே கட்டப்பட்டது. (புகைப்பட நகல் சமர்ப்பிக்கப்படுகிறது) ஆனால் அக்கட்டடத்தில் நூலகமே இயங்கவில்லை. எங்கள் பகுதியில் உள்ள மக்கள் நூலகம் செல்லவேண்டுமென்றால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள நூலகத்திற்குத்தான் செல்ல வேண்டும். மக்களிடம் நூலக வரியை வசூலிக்கும் மாநகராட்சியினர், எங்கள் பகுதியில் இன்னும் நூலக வசதியையே ஏற்படுத்தித்தரவில்லை. குறிப்பாக நாங்கள் வசிக்கும் வார்டு எண் 187 மற்றும் 188ஐத் தவிர சென்னையில் உள்ள அனைத்து வார்டுகளில் தனித்தனியே நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது குறித்து மாநகராட்சி அலுவலகத்திற்கும், மாவட்ட ஆட்சியர் மற்றும் சென்னை மேயருக்கும் மனுக்கள் அனுப்பப்பட்டது. மாவட்ட ஆட்சியரிடமிருந்து எவ்வித பதிலும் பெறப்படவில்லை. ஆனால் மேயர் அவர்களுக்கு என்னால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு மண்டல அலுவலகம் 14-லிருந்து 27.4.2022 நாளிட்ட கடிதத்தில் " கோட்டம் 187 மற்றும் 88 மடிப்பாக்கம் பகுதியில் மனுதாரர் கோரியுள்ள ஒருங்கிணைந்த நூலகம் அமைக்க தகுந்த இடம் (அரசு நிலம்) கள ஆய்வு செய்து தகுந்த இடம் கிடைக்கும்பட்சத்தில் மேயர் சிறப்பு மேம்பாட்டு திட்டத்திலிருந்து நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, எங்களிடம் நூலக வரியை வசூலிக்கும் மாநகராட்சியால், 187 மற்றும் 188 வார்டுகளில் மாநகராட்சியால் ஒருங்கிணைந்த நூலகம் அமைத்திட மாநகராட்சியால் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 14 உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 03.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை மடிப்பாக்கம் கோட்டம் 187 மற்றும் 188ல் மடிப்பாக்கம் முதல்நிலை ஊராட்சியாக இருந்தபோது 1999ம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில், மடிப்பாக்கம் ஊராட்சியாக இருந்தபோது அதாவது மடிப்பாக்கம் சென்னை மாநகராட்சியுடன் இணைப்பதற்கு முன்பாகவே அங்கு உணவுபொருள் பொது விநியோக கடை (Ration Shop) இயங்கி வருகிறது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். சென்னையில் இயங்கி வரும் நூலகங்கள் மாவட்ட நூலக ஆணைக்குழு மூலமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள கோட்டம் 187 மற்றும் 188ல் மேற்கண்ட ஆணையக் குழுவுக்கு சொந்தமான நூலகக் கட்டடங்கள் ஏதும் இல்லை. எனவே, மேலும் மனுதாரர் கோரிக்கை குறித்து மாவட்ட நூலக ஆணையத்திற்கு 17.4.2023 அன்று மாநகராட்சியால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து அதன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பேருந்து நிலையம் அருகில் பல்நோக்கு கட்டடம் (Multi Purpose Hall) அமைத்திட மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பல்நோக்கு கட்டடம் அமைக்கும் பணி முடிவுற்றவுடன் தற்போது பொது விநியோகக் கடை இயங்கிவரும் இடத்தில் நூலகம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14, மடிப்பாக்கம் 187, 188 வார்டுகளில் ஒருங்கிணைந்த கிளை நூலகம் அமைத்திட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14ன் அலுவலர்களால் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லையெனவும், பொது மக்களிடம் நூலக வரி வசூலிக்கும் மாநகராட்சி தங்களது பகுதியில் கிளை நூலகம் அமைக்க வேண்டியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி நூலகங்கள் மாவட்ட நூலக ஆணையக் குழு மூலம் நிர்வகிக்கப்பட்டு வருவதாகவும், பகுதி-42 வார்டுகள் - 187 மற்றும் 188ல் இவ்வாணைக் குழுவிற்கு சொந்தமான நூலகக் கட்டடங்கள் தற்போது ஏதும் இல்லையென்றும், மடிப்பாக்கம் ஊராட்சி, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைப்பதற்கு முன்பாகவே, அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட நூலகக் கட்டடத்தில் 2011-ஆம் ஆண்டு முதலே அக்கட்டடம் பொது விநியோகக் கடையாக பயன்படுத்தப்படுகிறது எனவும்

அக்கட்டடத்தில் நூலகமே இயங்கவில்லையெனவும், ஆனால் மடிப்பாக்கம் சுற்றியுள்ள பகுதியில் 8 நூலகம் இயங்கி வருவதாக மண்டல அலுவலரின் அறிக்கையில் தெரியவருகிறது.

மேலும் மடிப்பாக்கம் 187 (ம) 188ல் ஒருங்கிணைந்த கிளை நூலகம் அமைக்க மாவட்ட நூலக ஆணையத்திற்கு 17.4.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளதும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பேருந்து நிலையம் அருகில் பல்நோக்கு கட்டடம் (Multi Purpose Hall) அமைத்திட மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அக்கட்டடம் கட்டுமானம் முடிவுற்றவுடன், தற்போது பொது விநியோகக் கடை இயங்கும் இடத்தில் நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது மண்டல அலுவலர் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரியவருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் அலுவலர் தன்னுடைய **27.4.2022** நாளிட்டு மனுதாரருக்கு முகவரியிட்ட கடிதத்தில் ஒருங்கிணைந்த நூலகம் அமைக்க தகுந்த இடம் (அரசு நிலம்) கள ஆய்வு செய்து செய்ய தகுந்த இடம் கிடைக்கும் பட்சத்தில் மேயர் சிறப்பு மேம்பாட்டு திட்டத்தில் இருந்து சிறப்பு நிதியின் கீழ் ஒருங்கிணைந்த நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த நிலையில், மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள **7.5.2019 தேதியிட்ட** கடிதம் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட விபரம் கிடைக்கப் பெறவில்லையென்று தன்னுடைய **17.4.2023** நாளிட்ட அறிக்கையில் தெரிவித்து இருப்பது. மண்டலம்-14ல் கோப்புகள் சரியாக பராமரிக்கப்படவில்லை என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. முறையாக கோப்புகள் பராமரிக்கப்படாமல் இருப்பின் எவ்வாறு பொது மக்களின் கோரிக்கை மனு மீது நடவடிக்கை எடுக்க இயலும். இதற்கு கோப்புகளை பராமரிக்கும் மண்டல அலுவலர்களின் மெத்தனப் போக்கே காரணம் என்று இம்முறைமன்றம் தன்னுடைய அதிருப்தியை பதிவு செய்கிறது. பெருநகர சென்னை மாநகராட்சி பொது மக்களிடமிருந்து நூலகத்திற்காக ஏதேனும் வரி வசூல் செய்யப்படுகிறதா என்பதற்கு எந்த தகவலும் மண்டல அலுவலர்களால் தெரிவிக்க இயலவில்லை.

மேற்கண்ட சூழ்நிலையில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பேருந்து நிலையம் அருகில் பல்நோக்கு கட்டடம் (Multi Purpose Hall) அமைக்கப்பட்டவுடன், தற்போது பொது விநியோகக் கடை இயங்கிவரும் இடத்தில் நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -14ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் வாக்குமூலத்தில் தெரிவித்ததன் அடிப்படையில் அதற்கான மேல் நடவடிக்கைகளை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 14ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், பல்நோக்கு கட்டடம் கட்டும் பணி எப்போது முடிவடையும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் (ம) உதவிப் பொறியாளர் தெரிவிக்காத நிலையில், மடிப்பாக்கம் கோட்டம் 187 மற்றும் 188ல் வசிக்கும் பொது மக்களின் நலன் கருதி தற்காலிகமாக சட்டத்திற்கு உட்பட்டு, இடம் தெரிவு செய்து நூலகம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் அவர்களுக்கு அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

நகராட்சி நிர்வாக சட்ட நூல்களில் மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகள் நூலகங்கள் கட்டி நடத்த வேண்டும் என்று கூறப்படவில்லை. Local Library Authority (LLA) நூல்களையும், பிரசுரங்களும் வழங்கி வருவது அனைவரும் தெரிந்ததே. எனினும், நூலக வரி என்று ஒரு உள் மூலமாக மாநகராட்சி வசூல் செய்தால் இதிலும் கவனம் செலுத்துவது அவசியம் என இந்த நடுவம் கருதுகிறது.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. G.M. சங்கர்,
வழக்கறிஞர்,
57B, லெஷ்மி நகர் பிரதான சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.

2) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

3) துணை ஆணையர், (கல்வி)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*

4) மண்டல அலுவலர்,
மண்டலம்–14, பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை – 600 091.

5) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.